**சுருக்கம்**

பொதுப்பணிகள் – நேரடி நியமனங்கள் – தமிழ்நாடு அரசு மருத்துவம் – மக்கள் நல்வாழ்வு துறையில் உள்ள பணியிடங்கள் அனைத்திலும் தமிழ்நாட்டு இளைஞர்களை 100 சதவீதம் நியமனம் செய்யும் பொருட்டு, தேர்வு முகமையால் நடத்தப்படும் அனைத்துப் போட்டித் தேர்வுகளிலும் கட்டாயத் தமிழ் மொழித் தகுதித் தாளினை அறிமுகம் செய்தல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

**மருத்துவம் – மக்கள் நல்வாழ்வு (சி2) துறை**

அரசாணை (நிலை) எண்.208

நாள் 11.07.2022
திருவள்ளுவர் ஆண்டு 2053
சுபகிருது, ஆனி 27

படிக்க

1. அரசாணை (நிலை) எண்.133, மனித வள மேலாண்மை(எம்)துறை, நாள் 01.12.2021.
2. மருத்துவப் பணியாளர் தேர்வு வாரிய கடித எண்.2982 / மபதேவா / நி1 / 2021, நாள். 07.01.2022, 11.04.2022 மற்றும் 19.05.2022.

**ஆணை:**

தமிழ்நாடு அரசு துறைகளில் உள்ள பணியிடங்கள் அனைத்திலும் தமிழ்நாட்டு இளைஞர்களை 100 சதவீதம் நியமனம் செய்யும் பொருட்டு, தேர்வு முகமைகளால் நடத்தப்படும் அனைத்துப் போட்டித் தேர்வுகளிலும் கட்டாயத் தமிழ் மொழித் தகுதித் தாளினை அறிமுகம் செய்ய வேண்டும் என மேலே பார்வை 1–ல் படிக்கப்பட்ட அரசாணையில் தெரிவிக்கப்பட்டது.

2. அதனைத் தொடர்ந்து மருத்துவப் பணியாளர் தேர்வு வாரிய தலைவர், மேலே பார்வை 2ல் கண்ட தனது கடிதத்தில், மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியத்தால் நடத்தப்படும் அனைத்துப் போட்டித் தேர்வுகளுக்கும் தமிழ் மொழி தகுதித் தாளினை (Qualifying Paper) கட்டாயமாக்க கீழ்க்குறிப்பிட்டுள்ளவாறு கருத்துரு சமர்ப்பித்தார்:–

1. மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் மூலம் நடத்தப்படும் கட்டாயத் தமிழ் மொழித் தகுதித்தாள் கொள்குறி வகையில் பகுதி 'அ'–வில் (Objective Type) நடத்துதல்.
2. தமிழ் மொழித் தகுதித் தேர்வுக்கான பாடத்திட்டம் அரசாணையில் குறிப்பிட்டுள்ளபடி பத்தாம் வகுப்பு தரத்தில் நிர்ணயம் செய்தல்.
3. அரசாணையில் குறிப்பிட்டுள்ளபடி கட்டாயத் தமிழ் மொழித் தகுதித்தாளுக்கான குறைந்தபட்ச 40 சதவீதம் மதிப்பெண் என நிர்ணயம் செய்தல்.

Scanned with CamScanner

4. கட்டாயத் தமிழ் மொழித் தகுதித்தாள் தேர்வில் குறைந்தபட்ச 40 சதவீதம் மதிப்பெண் பெற்றிருந்தால் மட்டுமே, போட்டித் தேர்வின் அடுத்தகட்ட பகுதி 'ஆ' வினாக்கள் திருத்தம் செய்தல்.
5. கட்டாயத் தமிழ் மொழித் தகுதித்தாள் தேர்வில் எடுக்கப்படும் மதிப்பெண் தரவரிசைக்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது. பகுதி 'ஆ' வினாக்களுக்கான மதிப்பெண்கள் மட்டுமே தரவரிசைக்கு கணக்கில் எடுத்துக் கொள்ளுதல்.

3. மேலும், கட்டாய தமிழ் மொழி தகுதித் தாள் விபரம் (இணைப்பு-1) மற்றும் பகுதி-'அ' வில் தமிழ்மொழி தகுதித் தாளில் 50 மதிப்பெண் வழங்குவதற்கான விவரம் (இணைப்பு-2) ஆகியவற்றை கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:-

<u>இணைப்பு-1</u>

<u>மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் - கட்டாயத் தமிழ் மொழித் தகுதி தாள் விபரம்</u>

| வ. எண். | பணியிட வகை | தேர்வுத் திட்டம் | தேர்வின் பெயர் | வினாக்கள் | நேரம் | மதிப் பெண்கள் | குறைந்தபட்ச தகுதித் தேர்வு சதவீதம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியத்தால் நடத்தப்படும் அனைத்து தேர்வுகளுக்கும் | கொள்குறி வகை (OMR/ இணைய வழித்தேர்வு | பகுதி 'அ' கட்டாய தமிழ்மொழி தகுதித்தாள் | 50 | 1 மணி நேரம் | 50 மதிப் பெண்கள் | 40% |
| | | | பகுதி 'ஆ' முதனிலைத் தேர்வு | 100 | 2 மணி நேரம் | 100 மதிப் பெண்கள் | --- |

<u>இணைப்பு-2</u>

<u>மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் - கட்டாயத் தமிழ் மொழித் தகுதி தாள் விபரம் பகுதி 'அ'-வில் தமிழ்மொழி தகுதித்தாளில் 50 வினாக்களுக்கு 50 மதிப்பெண்கள் வழங்குவதற்கான விவரம்</u>

| வ. எண். | வினா வகை | மொத்த வினாக்கள் | வினாவிற்கான மதிப்பெண் | மொத்த மதிப்பெண்கள் |
|---|---|---|---|---|
| 1. | சரியான விடையை தேர்வு செய்தல் | 30 | 1 | 30 |
| 2. | பொருத்துக | 20 | 1 | 20 |
| | மொத்தம் | 50 | | 50 |

4. மேலே விவரித்துள்ளவாறு மருத்துவப்பணியாளர் தேர்வு வாரியம் கட்டாய தமிழ் மொழித் தகுதி தேர்வு நடத்துவதற்கு உரிய ஆணை வழங்குமாறு மருத்துவ பணியாளர் தேர்வு வாரிய தலைவர் அரசினைக் கேட்டுக் கொண்டார்.

5. இந்நேர்வினை உரிய ஆவணங்களுடன் அரசு கவனமுடன் பரிசீலனை செய்தது. மருத்துவ பணியாளர் தேர்வு வாரியம் வழங்கியுள்ள கருத்துருவினை ஏற்று, இனி வரும் காலங்களில் மருத்துவ பணியாளர் தேர்வு வாரியத்தால்

Scanned with CamScanner

நடத்தப்படும் அனைத்துப் போட்டித் தேர்வுகளுக்கும், தமிழ் மொழித் தகுதி தாளினை (Qualifying Paper) கட்டாயமாக்கி கீழ்க்கண்ட வழிகாட்டு நெறிமுறைகளை வெளியிடலாம் என அரசு உத்தேசித்து அவ்வாறே ஆணையிடுகிறது:–

(i) மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் நடத்தும் போட்டித் தேர்வுகளில் இரு நிலை கொண்ட தேர்வுகள் தற்போது நடத்தப்படுவதில்லை. அவ்வாறாக two stage examinations, தேர்வு வாரியத்தால் நடத்தப்படுமாயின் (Prelims + Mains), முதன்மை தேர்வில் (Main Examination) கட்டாயத் தமிழ் தாள் விரிந்துரைக்கும் தாளாக (Descriptive Type) நடத்தப்படும்.

(ii) <u>மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியத்தின் ஒரே நிலை கொண்ட (Single stage Examination) போட்டித் தேர்வுகள் பின்வரும் வழிவகைகளில் நடத்தப்படும்:–</u>

- கட்டாய தமிழ்மொழி தகுதி தாள் பகுதி 'அ' வில் கொள்குறி வகையில் (Objective type) கீழே கொடுக்கப்பட்டுள்ள இணைப்பு–1 மற்றும் இணைப்பு 2–ல் கண்டவாறு நடத்தப்படும்.
- அவ்வாறு நடத்தப்படும் தமிழ்மொழி தகுதித் தேர்வுக்கான பாடத்திட்டம் பத்தாம் வகுப்பு தரத்தில் நிர்ணயம் செய்யப்படும்.
- கட்டாய தமிழ்மொழி தகுதித் தாளுக்கான குறைந்தபட்ச மதிப்பெண் 40 சதவீதம் என நிர்ணயம் செய்யப்படுகிறது.
- மேற்படி தமிழ்மொழி தாளில் 40 சதவீதம் மதிப்பெண் பெற்றிருந்தால் மட்டுமே, போட்டித் தேர்வின் அடுத்தகட்டமான பகுதி 'ஆ' வினாக்கள் திருத்தம் செய்யப்படும்.
- கட்டாய தமிழ்மொழி தகுதித் தாளில் தேர்வர்கள் பெறும் மதிப்பெண் தரவரிசைக்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது. பகுதி 'ஆ' வினாக்களுக்கான மதிப்பெண்கள் மட்டுமே தரவரிசைக்கு கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்.

<u>இணைப்பு–1</u>

<u>மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் – கட்டாயத் தமிழ் மொழித் தகுதி தாள் விபரம்</u>

| வ. எண். | பணியிட வகை | தேர்வுத் திட்டம் | தேர்வின் பெயர் | வினாக்கள் | நேரம் | மதிப் பெண்கள் | குறைந்தபட்ச தகுதித் தேர்வு சதவீதம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியத்தால் நடத்தப்படும் அனைத்து தேர்வுகளுக்கும் | கொள்குறி வகை (OMR/ இணைய வழித் தேர்வு) | பகுதி 'அ' கட்டாய தமிழ்மொழி தகுதித்தாள் | 50 | 1 மணி நேரம் | 50 மதிப் பெண்கள் | 40% |
| | | | பகுதி 'ஆ' முதனிலைத் தேர்வு | 100 | 2 மணி நேரம் | 100 மதிப் பெண்கள் | — |

Scanned with CamScanner

இணைப்பு-2

மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் - பகுதி 'அ'-வில் கட்டாய தமிழ்மொழி தகுதித்தாளில் 50 வினாக்களுக்கு 50 மதிப்பெண்கள் வழங்குவதற்கான விபரம்

| வ. எண். | வினா வகை | மொத்த வினாக்கள் | வினாவிற்கான மதிப்பெண் | மொத்த மதிப்பெண்கள் |
|---|---|---|---|---|
| 1. | சரியான விடையை தேர்வு செய்தல் | 30 | 1 | 30 |
| 2. | பொருத்துக | 20 | 1 | 20 |
| | மொத்தம் | 50 | | 50 |

6. மேற்கண்ட அரசாணை மனிதவள மேலாண்மைத் துறையின் அ.சா.கு.எண்.2539738/எச்2/2022, நாள் 14.06.2022-ன் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ப.செந்தில்குமார்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
தலைவர், மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம், சென்னை-600 006.
மருத்துவம் - மக்கள் நல்வாழ்வு துறையின் அனைத்து இயக்குநர்கள்,
சென்னை.
இயக்குநர், வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி துறை, சென்னை -600 032.

**நகல்**
மாண்புமிகு அமைச்சர் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை
அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை-600 009.
மனிதவள மேலாண்மைத் துறை சென்னை-600 009.
மருத்துவம் - மக்கள் நல்வாழ்வு துறையின் அனைத்து பிரிவுகள்,
சென்னை-600 009.
இருப்புக் கோப்பு/உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

11/7/22
பிரிவு அலுவலர்
11/7/22

Scanned with CamScanner